LIBRARY 2- JUL 1956 MADRAS LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Saturday, 25th February 1956.

The House met in the Assembly Chamber, Government Estate, Mount Road, at eleven of the clock, Mr. Speaker (THE HON. SRI N. GOPALA MENON) in the Chair.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

I.—EXPRESSION OF SORROW AT THE DEATH OF TWO MEMBERS OF THE FORMER LEGISLATIVE ASSEMBLY.

MR. SPEAKER : It is my painful duty to inform the hon. Members, of the death of Sri B. Perumalla Naidu on 9th February 1956, a Member of the former Legislative Assembly, and of Sri K. Shanmugam on 17th February 1956, a Member of the former Legislative Assembly and also of this Legislative Assembly till the partition of Andhra. As a mark of respect for the deceased I request the hon. Members to stand in their places in silence for two minutes.

All the Members stood in silence for two minutes.

II.—CONDOLENCE RESOLUTION ON THE DEATH OF SRI S. VENKATRAMA AYYAR, M.L.A.

MR. SPEAKER : It is also my painful duty to inform the House, of the death of Sri S. Venkatrama Ayyar, Member from the Adiramapattinam Constituency, Tanjore district, on 7th February 1956. The Hon. Leader of the House will move the resolution.

* THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, it is my painful duty to move the following resolution :—

"This House places on record its deep sense of sorrow at the demise of Sri S. Venkatrama Ayyar, a late Member of this House from the Adiramapattinam Constituency, and conveys its deep sense of sympathy to the members of his bereaved family."

I am sure the hon. Members have known the late Member for a sufficiently long time. He hailed from a respectable family of Telugu Brahmins noted for its piety and charitable disposition. Mr. Venkatrama Ayyar himself had imbibed those qualities. He had a brilliant academic career and became a lawyer after taking his B.A. Degree. He practised at Pattukkottai and was well known as a capable pleader.

He was the President of the Pattukkottai Panchayat Board for nearly seventeen years, Vice-President of the Taluk Board for four years and a member of the Tanjore District Board for several years. In the field of co-operation, he was taking an active part and was President of the Co-operative Urban Bank, Director of the Co-operative Land Mortgage Bank and Vice-President of the Nadiambal Bank at Pattukkottai.

He was also a member of the Senate of the University of Madras and a trustee of several temples.

In the recent cyclone, Sri S. Venkatrama Ayyar, in spite of his bad health, gave good advice and rendered valuable assistance to both the officials and non-officials in the speedy and proper implementation of the various relief measures organized in Pattukkottai:

He was a public-spirited social worker and a veteran Congressman who was closely associated with the Congress organization, being a member of the Provincial, District and Taluk Congress Committees. He was a very influential man in Pattukkottai who was liked by the wealthy and the poor alike. He was returned to the Legislative Assembly from the Adiramapattinam Constituency in the General Elections in 1952 and in his death the Tanjore district and also Tamilnad has lost a very prominent political leader, social worker and a loving friend. He was so popular that Pattukkottai Town observed a complete hartal on 7th February 1956, the date on which he died. I am sure all the Members will join me in passing the resolution and conveying our sympathy to the members of the bereaved family.

Sri S. SWAYAMPRAKASAM : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நாம் கனம் வெங்கட்டராமய்யர் அவர்கள் மறைந்ததைப் பற்றி பேசுகிற காலத்தில் இதே சபையில் பலர் சில மாதங்களுக்கு முன்னால் அதாவது கனம் ராமசாமி தேவர் அதற்கு முன்னால் நாடிமுத்து பிள்ளை போன்றவர்கள் மறைந்த வெகு சீக்கிரத்திலேயே கனம் வெங்கட்டராமய்யர் அவர்களையும் நாம் இழக்க நேரிட்டிருக்கிறது. கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னதுபோல் கனம் வெங்கட்டராமய்யர் அரசியலில் தஞ்சை ஜில்லாவில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டிருந்தார். சென்ற இருபது ஆண்டுகளாக தஞ்சை ஜில்லா அரசியல் வாழ்வில் கனம் வெங்கட்டராமய்யர் அவர்கள் நல்ல பங்கு கொண்டிருந்தார் என்பதை தஞ்சை ஜில்லா வாசிகள் நன்கு அறிவார்கள். கொஞ்ச நாளைக்கு முன்னதாகத்தான் நாம் கனம் நாடிமுத்து பிள்ளை அவர்கள் மறைந்ததைப் பற்றி இச்சபையில் ஒரு அநுதாபத் தீர்மானம் நிறைவேற்றினோம். கனம் நாடிமுத்து பிள்ளை அவர்கள் தஞ்சை ஜில்லாவிற்கு மட்டுமல்லாமல் மாகாணம் பூராவிலுமே அரசியலில் அதிகம் பங்கெடுத்துக்கொண்டு காரியங்களைச் செய்துவந்தார். அவர் ஜில்லா போர்டில் பல வருஷம் அங்கம் வகித்து தலைமைப் பதவி வகித்து பல வருஷ காலம் ஆண்டு வந்தார் என்றால் அவருக்கு அப்பொழுது உற்ற துணைவராக இருந்தவர் கனம் வெங்கட்டராமய்யர் அவர்கள்தான் என்று நான சொல்லுகிறேன். கனம் நாடிமுத்து பிள்ளை அவர்கள் என்னென்ன காரியங்கள் செய்தாரோ அந்தக் காரியங்கள் எல்லாம் முதலில் கனம் வெங்கட்டராமய்யர் அவர்கள் பரிசீலனை செய்து பார்த்த பிறகுதான் அவைகளைச் செய்வதற்கு கனம் நாடிமுத்து பிள்ளை அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்றால் அதன் உண்மையை அறிந்து கொண்டவர்கள்தான் அதை ஒப்புக்கொள்ளுவார்கள். அப்படிப்பட்ட வெங்கட்டராமய்யருடைய ஒரு முக்கியமான குணம் என்னவென்றால் கனம் நாடிமுத்து பிள்ளை அவர்கள் என்ன அவருக்குக் கொடுக்க இருந்தும்கூட தனக்காக கனம் வெங்கட்டராமய்யர் அவர்கள் ஒன்றும் செய்துகொள்ளவில்லை. இன்றைய தினம் தஞ்சை ஜில்லா வாசிகள் உள்பட ஒவ்வொருவரும் அதை ஒப்புக்கொள்ளுவார்கள். தன்னுடைய முன்னேற்றத்திற்கு தக்க வசதி இருந்தும்கூட அவர் தனக்காக கடைசி வரையிலும் தனக்கு என்று ஒன்றும் செய்துகொள்ளவில்லை என்பதை இங்கு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட ஒரு முக்கியமான குணம் அய்யரிடத்தில் இருந்தது. அது தனக்கு என்று ஒன்றும் செய்துகொள்ளாததுதான். ஆகையால் அவரை இழந்தது தஞ்சை ஜில்லா மட்டுமல்ல இந்தத் தமிழ் நாடு அவருடைய சேவையை இழந்திருக்கிறது. அதற்காக என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

25th February 1956]

* SRI M. NARAYANA KURUP : Mr. Speaker, Sir, I have observed Mr. Venkatrama Ayyar as a most unassuming and useful Member of the House. Perhaps that is due to his background of long experience gained in public life. We have amongst us only a few of the calibre of Mr. Venkatrama Ayyar. Whenever he rose to speak on any subject, he demanded attention and he had always something to contribute to the discussion on matters before this House. On behalf of myself and my party, I associate myself with the sentiments expressed by the Leader of the House and also by the previous speaker. 11-10 a.m.

* SRI K. KUNHI MOHAMED SHAFEE : Sir, on behalf of the Muslim League Party, I associate myself fully with all the sentiments expressed by the Leader of the House and by other hon. Members of the House on the death of Sri S. Venkatrama Ayyar.

* SRI D. K. RAJU : Mr. Speaker, Sir, on behalf of the Independent Party, I associate myself with the sentiments expressed by the Leader of the House and other Members of the House on the demise of Mr. Venkatrama Ayyar. I had been associated with him very closely, and hon. Members, one and all, know Mr. Venkatrama Ayyar and his sociable qualities. We all of us feel his loss. When our Members were speaking to each other about the demise of Mr. Venkatrama Ayyar, one and all say that to-day's condolence resolution on the death of Mr. Venkatrama Ayyar was quite appropriate. That shows how popular he was with all the Members irrespective of party affiliations. I once again associate myself with the sentiments expressed by the Leader of the House and others.

SRI U. MUTHURAMALINGA THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, திரு. வெங்கட்டராமய்யர் அவர்களுடைய சாவு ஒரு பழம் பெரும் தேச பக்தரின், அதுவும் இந்த தேசம் விடுதலைக்காகப் போராட வேண்டுமென்று கிளர்ச்சியை ஆரம்பித்த காங்கிரஸ்காரரின் முதல் வரிசையில் நின்ற ஒரு தேச பக்தரின் சாவு ஆகும்.

காங்கிரஸ் இன்று பலவிதமான நிலைமையை அடைந்திருக்கிறது. பலவிதமான புது நபர்கள் ஸ்தானங்களைப் பெறும்படியான நிலைமையை அடைந்திருக்கிறது. ஆனால் ஆதியில் இந்த தேசத்தின் விடுதலைக்காக, தான் ஒரு பெரிய பணக்காரராக இல்லாது எளியவராக இருந்தபோதிலும் கூட, தன்னுடைய சிறைச்சாலை வாசம் தன் குடும்பத்திற்கு மிகுந்த துன்பத்தை கொடுக்கும் என்று அறிந்தும்கூட, தன்னால் தன் குடும்பத்திற்கு ஏற்பட இருந்த துன்பத்தையும், இன்னலையும் எண்ணாது, நீண்ட காலம் சிறைச்சாலையில் இருந்து கஷ்டப்பட்டு, பலவிதமான இன்னல்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாகி, நாடு விடுதலை அடைந்த பிறகு தாங்கள் பட்ட கஷ்டங்களுக்குப் பலனாகப் பலவிதமான வசதிகளைத் தேடிக்கொண்டிருக்கும் காங்கிரஸ்காரர்களைப் போலல்லாமல், தனக்கென்று வசதி தேடிக்கொள்ள வாய்ப்பு இருந்தும் தேடிக்கொள்ளாது, மக்களுக்காகவே கடைசி மூச்சு வரையிலும் சேவை செய்து மண்ணைவிட்டு மறைந்த மகாப் புனிதமான வாழ்க்கையைக்கொண்ட காங்கிரஸ்காரர் அவர்.

சிறைச்சாலையில் இருந்த காலத்திலும் சமையல் முதலிய காரியங்களில் ஈடுபட்டு, தன்னோடு இருந்தவர்களுக்கு எல்லாம் ஊழிய வேலை செய்தார்கள். அவர் கை உணவை நாங்கள் உண்டிருக்கிறோம். அப்பேர்ப்பட்ட புனிதமானவரைப் பிரிந்து இன்றைக்கு அனுதாபத் தீர்மானத்தின்மீது பேச

வேண்டிய நிலையை எனக்கு ஏற்பட்டிருக்கிறதே என வருத்தமடைகிறேன். அவருடைய ஆத்மா சாந்தி அடையவேண்டுமென்று பிரார்த்திருக்கிறேன், தேசத்தின் பெயரால்.

* SRI A. RATNAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ வெங்கட்ட ராமய்யர் அவர்கள் பிராமண இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட, அவர் நீண்ட நெடுங்காலமாக அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்து வந்திருக்கும் சேவை அளவிடற்கரியது. அவர் இல்லாதது இந்தச் சபைக்கு ஒரு குறை என்பதைப் போலவே, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும்கூட ஒரு பெருங்குறை என்று நான் கருதுகிறேன்.

எதிர்க் கட்சியிலிருந்துகொண்டு, நான் தாழ்த்தப்பட்டவர்களின் சார்பில் பேசும்பொழுது எல்லாம், என்னை அவர் அண்மையில் அழைத்து வைத்துக்கொண்டு, " நீ இன்னும் அதிகமாகப் பேசவேண்டும். நீ நன்ருக தாழ்த்தப்பட்டவர்களுக்காக வாதாடவேண்டும். அப்பொழுதுதான் இந்த அரசாங்கம் ஏதாவது சில காரியங்களையாவது செய்யும். அவர்களுடைய பேச்சிலே நீ மயங்கிவிட வேண்டாம் ", என்று சொல்லி என்னைத் தட்டிக் கொடுத்து நான் பேசுவதற்கு ஊக்கம் அளித்திருக்கிருர்.

அந்தப் பழம் பெரும் தலைவர் ஆரிய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்கூட, ஆரியர்களுக்குத்தான் ஹரிஜனங்களிடத்தில் அதிக அக்கறை உண்டு என்பதை தன்னுடைய சேவையினுல் எடுத்துக் காட்டிக் கொண்டு அவர் வீற்றிருந்தார். தன் வாழ்நாளிலே மிக அதிகமான சேவை செய்யவேண்டுமென்ற பேரவா அவருக்கு மிக அதிகம் உண்டு. அவர் ஹரிஜன மக்களுக்காக இடைவிடாது செய்துவந்த தொண்டினுக்காக இந்த நேரத்தில் அஞ்சலி செய்ய நான் கடமைப்பட்டிருக்கிறேன். பழம் பெரும் தேச பக்தராகிய அவருடைய ஆத்மா சாந்தி அடையவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இதைவிட அதிகமாகப் பேச எனக்கு முடியாத காரணத்தினுலே இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI K. R. SAMBANDAM : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் வெங்கட்டராமய்யர் அவர்கள் இறந்தது குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானத்தை நானும் ஆதரித்து ஓரிரு வார்த்தைகள் சொல்ல ஆசைப் படுகிறேன்.

அவர் தஞ்சை ஜில்லா போர்டு அங்கத்தினராக இருந்தபோது நானும் அங்கத்தினராக இருந்து அவருடன் வேலை செய்து இருக்கிறேன். அப்பொழுது நான் எதிர்க்கட்சியில் இருந்தேன். அப்படி இருந்தும்கூட நியாயமான கோரிக்கைகளை எல்லாம் அவர் மறுத்துவிடுவது கிடையாது. " எதாக இருந்தாலும் என்னிடம் நேரில் வந்து சொல்லு. நான் அதற்கு எதிர்ப்பு இல்லாமல் நிறைவேற்றித் தருகிறேன் " என்று அவர்கள் சொல்வார்கள். எதிர்க்கட்சி என்றும், ஆளும் கட்சி என்றும் பாகுபாடு இல்லாமல் நாட்டு நலனுக்காகச் செய்யவேண்டிய நல்ல பணிகளை எல்லாம் அவர்கள் ஆற்றி வந்தார்கள்.

ஆஸ்த்மா என்ற நோயினுல் அவர்கள் பெரிதும் அல்லலுற்றதால் தினமும் ஊசி போட்டுக்கொண்டிருப்பார். அப்படி இருந்தும்கூட ஒரு சட்டசபை கூட்டத்திற்காவது அவர்கள் வராமல் இருந்தது கிடையாது. அவர் தன்னுடைய தன்னலம் கருதா சேவையினுல் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக இருந்தார்கள். அன்னருடைய ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென்று இறைஞ்சி இந்த அளவில் என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI P. RAMAMURTHI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை துவங்கிய காலத்திலிருந்து அனேகமாக ஒவ்வொரு தடவையும் இந்த மாதிரியான தீர்மானம் நிறைவேற்றவேண்டிய துன்பத்திற்கு நாம் உள்ளாகியிருக்கிறோம். இந்தத் தடவை ஸ்ரீமான் வெங்கட்டராமய்யர் அவர் களுடைய மறைவைக்குறித்து அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றவேண்டிய

25th February 1956] [Sri P. Ramamurthi]

துர்பாக்கியமான நிலைமையில் இருக்கிறோம். ஸ்ரீ வெங்கட்டராமய்யர் அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபட்டு, அரசியல் வாழ்வில் ஈடுபட்டு, நாட்டுக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் செய்திருக்கக்கூடிய தொண்டுகளை எல்லாம் பற்றி சர்க்கார் கட்சித் தலைவரும், அவருடைய ஜில்லாவையே சேர்ந்த பிரதிநிதிகளும் நன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்னாருடைய குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில், நானும் அவர்கள் எல்லோரும் கூறியவற்றிற்கு எல்லாம் ஐக்கியப்பட்டு, இத்தத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன். அவருடைய ஆத்மா சாந்தி அடையட்டும் என்று தெரிவித்துக்கொள்ளவும் ஆசைப்படுகிறேன்.

* **Sri C. MUTHIAH PILLAI** : கனம் சபாநாயகர் அவர்களே, ஸ்ரீ வெங்கட்டராமய்யர் அவர்கள் ஆகஸ்டு மாதம் நடந்த சபையிலே இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் என்ன என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி கடைசியாகப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு நடந்த கூட்டத்திற்கு எல்லாம் இந்தச் சபையில் வந்து கலந்து கொள்ளவேண்டுமென்ற அவாவோடு "எனக்குக் கீழே அறை கொடுத்தால் கண்டிப்பாக வருகிறேன்", என்று சொன்னார்கள். அவருக்குக்கீழ் அறை கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் நாங்கள் செய்தோம். எங்களுக்கு எல்லாம் அவர் வரவேண்டும்; ஏதாவது யோசனைகளைச் சொல்லவேண்டுமென்றே இருந்தது. அவர் வசித்த பிராந்திய மக்களுக்கு அவர் செய்திருக்கும் சேவை சொல்ல முடியாதன. அவர் மேலும் மேலும் என்ன என்ன காரியங்களை நாங்கள் செய்து வரவேண்டுமென்பதற்கு அடிக்கடி கடிதம் எழுதுவார்கள். பல விஷயங்களை அமைச்சர் அவர்களிடம் சொல்லவேண்டுமெனவும் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

சென்ற ஆறு மாத காலமாக அவர் நோயினால் பட்ட துன்பம் அதிகம், சில சமயங்களில் அவரை நாங்கள் அவருடைய அறையிலிருந்து தூக்கிக் கொண்டு கீழே வந்திருக்கிறோம். அந்த நிலையிலும் அவர்கள் பொதுப் பணியை விடாமல் செய்து வந்திருக்கிறார்கள் என்பதுதான் மிகவும் பாராட்டுதலுக்குரியது. அவர் அந்தப் பிராந்திய மக்களுக்குச் செய்திருக்கும் சேவையும், அதனால் அந்தப் பிராந்திய மக்கள் எவ்வளவு அன்போடு விஸ்வாசத்தோடு நடந்துகொண்டார்கள் என்பதற்கும் சான்று, அவர் இறந்ததுடன், அவருடைய பிரேதம் எல்லா மக்களுக்கும்தான் சொந்தம் என்ற வகையில் பலவிதமான மரியாதைகளைச் செய்ததேயாகும்.

அவர்கள் இந்தச் சபையிலே நிகழ்த்திருக்கும் பிரசங்கங்களைப் பார்த்தால், தஞ்சை ஜில்லாவின் சார்பாக இனி அவ்வாறு யோசனைகளைச் சொல்வதற்கு கருத்து உள்ளவர்கள் யார் இருக்கிறார்கள் என்று தான் வருத்தப்பட வேண்டியவனாக இருக்கிறேன்.

முக்கியமாக அவர்கள் பொதுவாழ்வில் ஈடுபட்டு, அரசியல் வாழ்வில் ஈடுபட்டு, இந்தச் சபையிலும் சரி, வெளியிலும் சரி செய்து வந்திருக்கும் சேவைகளை எல்லாம் பாராட்டி, இந்த நேரத்தில் நான் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri M. MARIMUTHU** : கனம் தலைவர் அவர்களே, காலஞ்சென்ற 11-20 a.m.
ஸ்ரீமான் வெங்கட்ராம அய்யர் அவர்களின் மரணத்தைப்பற்றி இப்பொழுது பேசுவதற்கே என் மனம் மிகவும் தடுமாற்றம் அடைகிறது. அவர் பட்டுக்கோட்டை வாசி, நானும் பட்டுக்கோட்டை வாசி என்ற முறையில் அவருடைய சேவைகளை நன்கு அறிவேன். எனக்கு முன்னால் பேசிய பல அங்கத்தினர்கள் அன்னாருடைய சேவைகளைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அவர் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினராகவும், தஞ்சை ஜில்லா போர்டு அங்கத்தினராகவும், இன்னும் அநேக ஸ்தாபனங்களிலும் இருந்திருக்கிறார். அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய சேவைகளை வகுத்துக்கொள்வதற்கே நேரம் போதாமல் அவர் இருந்திருக்கிறார். குறிப்பாக அவருடைய சேவைகளைப்பற்றி சொல்லவேண்டுமானால், ஹரிஜனங்களுடைய நலனுக்காக அவர் மிகவும் பாடுபட்டிருக்கிறார். ஹரிஜனங்களுடைய நலன்களுக்காக என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்வதற்கு முயற்சி எடுத்து வந்தார். அன்னார் பிராம்மண சமூகத்தில் பிறந்தவராக இருந்தாலும்,

[Sri M. Marimuthu] [25th February 1956

ஜாதி மத வித்தியாசம் பாராட்டாத தன்மையுடையவர். என்னைப் பொருத்த வரையில் அவருடைய வீட்டில் ஜாதி வித்தியாசம் இல்லாமல் நான் பழகுவதற்கு வாய்ப்பு அளித்தவர். அவ்வளவு நெருக்கமாக நாங்கள் பழகிவந்திருக்கிறோம்.

ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளை அவர்களைப்போலவே இவரும் என்னுடன் நல்ல முறையில் பழகிவந்தார், மிகவும் அன்புடனும் இருந்துவந்தார்கள். ஸ்ரீமான் நாடிமுத்துப் பிள்ளை அவர்களும், ஸ்ரீமான் வெங்கட்ராம அய்யர் அவர்களும் மறைந்தது பட்டுக்கோட்டைக்கே ஒரு பெரிய நஷ்டம் என்றுதான் சொல்லவேண்டும். பட்டுக்கோட்டைக்கு மட்டுமல்ல ; தஞ்சை ஜில்லா முழுவதற்குமே ஒரு நஷ்டம். தஞ்சை ஜில்லாவின் நிலைமையை இந்தச் சபை முன்பாக அவர்கள் மிகவும் திறம்பட எடுத்துச் சொல்லிவந்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இறந்தது எங்கள் ஜில்லாவிற்கு மிகப் பெரிய நஷ்டமாகும். ஏழை மக்கள் முதல் பணக்காரர் வரை எல்லோரையும் ஒரே விதமாக பாவித்து வந்தார் ; எந்தவிதமான கட்சி பாகுபாடும் இல்லாமல், ஜாதி மத பேதத்தைப் பாராட்டாமல் பொது மக்களின் நன்மையே முக்கியம் என்று கருதி உழைத்து வந்தார்.

அவருடைய சடலத்தை மயானத்திற்குக் கொண்டுபோவதற்கு முன்பாக செய்யவேண்டிய வைதிகச் சடங்குகளெல்லாம் பிராம்மண சமூகத்தினர் வழக்கமாகச் செய்வதுபோல்தான் இருக்கவேண்டுமென்று ஒரு சிலர் சொன்னாலும், பொது மக்கள் அதற்கு அவ்வளவாக இடம் கொடுக்காமல், பொது மக்களெல்லோராலும் போற்றப்பட்டுவந்த ஒருவரை, பொதுச் சேவை செய்துவந்த ஒருவரை, பொது மக்களின் இஷ்டத்திற்கிணங்கவே கடைசி மரியாதைகளுடன் எடுத்துச்செல்லவேண்டியதாயிற்று. வைதிகக் கிரியைகளை பத்து நிமிடங்களுக்குள்ளாக முடிக்கும்படி செய்துவிட்டு, பொதுமக்களுடைய இஷ்டத்தின்படி அந்தச் சடலத்திற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்தார்கள். உச்சி முதல் உள்ளங்கால் வரை புஷ்பத்தால் மறைத்து, பிரேதம் என்றுகூட தெரியாத அளவுக்கு மலர் மாலைகளை ஜோடனை செய்து, ரதத்தில் ஏற்றிச் செல்வதுபோல் பல்லக்கு முதலியவை ஜோடித்து, மயானம் போகும் வரையில் மிகவும் சிரத்தையோடு கொண்டு போய் தகனம் செய்யப்பட்ட காட்சி மிக உருக்கமாகவும், பிரமாதமாகவும் இருந்தது.

அன்னார் அட்வொகேட்டாக இருந்தாலும் அந்தத் தொழிலிலேயே ஈடுபடாமல், பொதுமக்களின் சேவைக்காகவே வாழ்நாள் முழுவதும் கட்சிப் பிரதிகட்சி இன்றி பாடுபட்டு வந்தார். அவர்கள் இன்னும் கொஞ்ச காலம் உயிருடன் இருந்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். அவருடைய மறைவு எனக்குப் பெருத்த நஷ்டமாகும். எனக்கு ஒரு கை முறிந்துவிட்டது மாதிரி இருக்கிறது. சாதாரணமாக சட்டசபை அங்கத்தினர்கள் செய்யவேண்டிய கடமைகளைவிட அவர்கள் மிக உயரிய முறையில் சட்டசபையிலும் வெளியிலும் காரியங்களைச் செய்துவந்தார். அவருடைய சேவைகளைச் சொல்லி முடியாது. ஆகையால், அவருடைய மரணத்திற்கு அனுதாபம் காட்டி என்னுடைய சொற்பொழிவை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்

11 25 a.m. MR. SPEAKER : I desire to associate the Chair with the sentiments expressed by the Hon. Leader of the House and other hon. Members. Mr. Venkatrama Ayyar belonged to an old and respectable family and he was well known for his pious and charitable disposition. He practised as a lawyer at Pattukottai and devoted the best years of his life to the service of his constituency and of his party. For many years he guided the deliberations of the Pattukottai Panchayat Board as its President. As Vice-President of the Taluk Board and as Member of the District Board, he brought to bear on the deliberations of those bodies a deep sense of public interest. He was a prominent figure in Pattukottai and was closely associated with all the public activities there and took

25th February 1956] [Mr. Speaker]

a keen interest in the working of the Co-operative Urban Bank, Co-operative Land Mortgage Bank and the Nadiambal Bank. As a Member of the Assembly, his contributions to the discussion may not be many, yet on those occasions when he spoke whether it be on the Governor's Address or on the General Budget discussions or on Bills like the Madras Indebted Agriculturists Relief Bill, he exhibited a rare concern for the welfare of the underprivileged and the lowly. He was a strong and steadfast member of his party and his presence in the lobby and his genial conversation will long remain a cherished memory. May his soul rest in peace.

By way of passing the resolution, and as a mark of respect for the departed soul, I request hon. Members to stand in their places in silence for two minutes.

The resolution was carried *nem con* all the Members standing.

THE HON. SRI C. SUBRAMANIAM : As a mark of respect for the departed soul, I propose that the House may be adjourned for the day.

MR. SPEAKER : As a mark of respect for the departed soul, the House will now stand adjourned to 11 a.m. on Monday, the 27th February 1956.

The House then adjourned.

III.—QUESTIONS AND ANSWERS.

UNSTARRED QUESTIONS.

Roads in Cuddalore taluk

618 *Q.*—SRI A. RATNAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the particulars of roads maintained by the Public Works Department in Cuddalore taluk; and

(*b*) the aid and loan sanctioned by the Government for the maintenance, renewal and construction of roads by the district board and the municipality in that taluk in 1953–54?

A.—(*a*) The roads mentioned below are maintained by the Government in Cuddalore taluk :—

Serial number and name of road.	Classification.	Length. M.	F.	FT.
1 Cuddalore-Chittoor road ..	State Highway ..	23	6	0
2 Cuddalore-Pondy road ..	Major District road.	5	3	0
3 Cuddalore-Chidambaram road.	Do.	13	6	0
4 Cuddalore-Vriddhachalam road.	Do.	19	0	0
5 Perumal Tank Bund road ..	Do.	9	1	619

(*b*) During 1953–54 the district board utilized Rs. 20,951–4–0 for capital works on some of its roads in Cuddalore taluk out of the grant of Rs. 92,500 sanctioned to it in that year.